STC 306/2018 ம.சா.1 இம்தியாஸ் த/பெ.சிராஜூத்தின் வயது 42

**<u>சாட்சி மீண்டும் அழைத்து சத்திய பிரமாணம் செய்து எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நாள் : 02.04.19

நேரம் : 12.00 AM

எனக்கு தமிழ் எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். Best Leather மற்றும் நேளவ Ready mades என்ற பெயரில் நான் வியாபாரம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் வியாபாரம் செய்வதற்கு வருமான வரியில் கணக்கு, வழக்கு காட்டி வருகிறேன் என்றால் சரிதான். இந்த தொழிலில் இருந்து வந்த வருமானத்தில் தான் எதிரிகளுக்கு பணம் கொடுத்தேன் என்றால் சரியல்ல, நான் சேமித்து வைத்திருந்த பணத்தை வைத்து தான் எதிரிகளுக்கு கொடுத்தேன். இந்த 2 வியாபாரத்தை தவிர வேறு வியாபாரம் நான் செய்யவில்லை என்றால் சரியல்ல. சேமிப்பு பணம் வியாபாரத்தின் மூலம் கிடைத்த பணம் என்றால் சரியல்ல. எனக்கு இந்த சேமிப்புக்கான பணம் எப்படி வந்தது என்றால் LIC-யில் காப்பீடு ஒன்று எடுத்துள்ளேன், அதிலிருந்து நான் பெறப்பட்ட கடனை சேமிப்பாக சேர்த்து வைத்திருந்தேன். LIC–மூலம் எனக்கு வந்ததாக சொல்லும் பணம் வங்கி மூலமாக தான் வரும் என்றால் சரிதான். வங்கி மூலமாக பணம் வந்தால் அந்த பணம் வருமான வரி கணக்கில் வரும் என்றால் சரிதான். வருமான வரி கணக்கினை நான் நீதிமன்றத்தில் சமர்பித்தால் தான் , நான் எதிரிகளுக்கு பணம் கொடுத்த விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். அதை தாக்கல் செய்ய தயராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எதிரிகள் யார் என்னிடம் பணம் கேட்டார்கள் என்றால் இரண்டு எதிரிகளும் பணம் கேட்டார்கள். எந்த எதிரியிடம் நான் பணம் கொடுத்தேன் என்றால் இரண்டு எதிரிகளிடம் பணம் கொடுத்தேன். எதிரிகள் எந்த தேதியில் பணம் கேட்டார்கள் என்றால் 22.10.2017 ம் தேதி பணம் கேட்டார்கள். 23.11.2017ம் தேதி நான் எதிரிகளுக்கு பணம் கொடுத்தேன். எதிரிகளிடம் நான் எந்த தேதியில் திரும்ப பணம் கேட்டேன் என்றால் எதிரிகள் கடன் வாங்கும் பொழுது 5 மாதத்திற்குள் திருப்பி தருவதாக சொன்னதால் 23.03.2018ல் எதிரிகளிடம் நான் பணம் கேட்டேன். என்னுடைய கணக்கு பிரகாரம் பார்த்தால் 4 மாதங்கள் தான் கணக்கு வருகிறது என்றால் , என்னிடம் எதிரிகள் பணம் வாங்கும் பொழுது 5 மாதத்திற்குள் திருப்பி தருவதாக சொன்னார்கள். என்னுடைய முதல் விசாரணையில் 2வது பாராவில், 2வது வரியில் எதிரிகள் கூறிய வாயிதா காலத்திற்கு பின்பு என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லியிருந்தால் என்னுடைய வழக்கு தள்ளுபடி செய்ய ஆட்சேபணை இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் காசோலைகளை வெற்று காசோலைகளாக கொடுத்ததாகவும், அதை வழக்கிற்காக பூர்த்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி இரண்டு லட்சத்திற்கு ஒரு காசோலை கொடுத்திருக்கலாம், பொய் வழக்கு என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எந்த தேதியில் காசோலைகளை மாற்ற சொன்னார்கள் என்றால் 01.06.2018 ம் தேதி காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்ய சொன்னார்கள். காசோலை தேதி குறிப்பிடப்பட்ட தேதியிலிருந்து 90 நாட்களுக்குள் காசோலை மாற்றப்பட வேண்டும் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் காசோலையை 6 மாதங்கள் கழித்து பணமாக மாற்ற தாக்கல் செய்தேன் , அதனால் காசோலை மாற்ற இயலாது என்றால் சரியல்ல. காசோலையில் தேதி திருத்தம் செய்யப்பட்டு வங்கியில் செலுத்தியுள்ளேன் என்றால்

சரியல்ல. 2 காசோலைகளும் எந்த காரணத்திற்காக பணம் மறுக்கப்பட்டது என்றால் எதிரியின் வங்கி கணக்கு Account Blocked என்று திருப்பபட்டது. நான் தாக்கல் செய்த காசோலை 6 மாதத்திற்கு மேற்பட்ட காசோலை என்பதனால் தான் அந்த காசோலை Block செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கை எதிரியின் வங்கி கணக்கு Blocked என்ற காரணத்தின் அடிப்படையில் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வேறு காரணங்களை சொல்லி இந்த வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இவ்வழக்கு தள்ளுபடியாக எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். 12.06.2018ல் எதிரிகளுக்கு ஒரு அறிவிப்பு அனுப்பி வைத்தேன் என்றால் சரிதான். இந்த அறிவிப்பிலுள்ள கையெழுத்து என்னுடையது என்றால் சரிதான். இந்த அறிவிப்பில் போதிய பணமில்லை என்ற காரணத்தினால் காசோலை திருப்பட்டதாக குறிப்பிடப்பட்டது என்றால் சரிதான். நான் அறிவிப்பில் ஒரு வழக்கு மூலமும், வழக்கில் ஒரு வழக்கு மூலமும் சொல்லியுள்ள காரணத்தினால் இந்த வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிகளுக்கும், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் 60/2018 என்ற வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாக 02.06.2018 ம் தேதி ஒரு சட்ட அறிவிப்பு அனுப்பபட்டது என்றால் சரிதான். அந்த சட்ட அறிவிப்பில் 2 காசோலைகளையும் திரும்ப கொடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் அறிவிப்பு அந்த சட்ட அறிவிப்பின் சான்றிட்ட நகல் என்றால் சரிதான். அது எ.த.சா.ஆ1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கில் எதிர் வழக்குரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் அசல் வழக்கு எண் 68/2018ன் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிர் வழக்குரை என்றால் சரிதான். எதிர் வழக்குரை எ.த.சா.ஆ2. அந்த எதிர் வழக்குரையில் முதல் பக்கத்தில் 5வது பாராவில் காசோலை எண்கள் 30415, 30416 என்ற காசோலைகளை செக்யூரிட்டிக்காக எதிரிகள் கொடுத்ததாக சொல்வது முற்றிலும் பொய்யானது என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். 02.06.2018 தேதியிட்ட அறிவிப்பிற்கு என் தரப்பில் பதில் அறிவிப்பு அனுப்பபட்டதாக தெரிவிக்கப்பட்டது என்றால் சரிதான். 02.06.2018ம் தேதி அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அந்த அறிவிப்பினை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞர் மூலமாக தாக்கல் செய்துள்ளேன். இவ்வழக்கு நான் தாக்கல் செய்வதற்கு முன்பாக அடியாட்களுடன் சென்று எதிரிகள் அலுவலகத்திலிருந்த தோல்களை எடுத்து வந்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்த எதிர் உரையில் 9வது பத்தியில் 4128 தோல்களை எதிரிகள் கொடுக்க வேண்டிய பணத்திற்காக எடுத்து வந்திருப்பதாக தெரிவித்துள்ளேன் என்றால் சரிதான். அது இந்த வழக்கிற்கு சம்மந்தப்பட்டது அல்ல, உரிமையியல் வழக்கில் சொல்லப்பட்ட பணத்திற்கானது ஆகும். எதிரிகள் மீது எதிரிகள் பணம் தர வேண்டுமென்று நகர காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் கொடுத்துள்ளேன். புகார் கொடுத்ததாக நான் உரிமையியல் வழக்கில் சொல்லியிருப்பது எதிரியின் நண்பர் என்னை அடிக்க வந்ததால் அது குறித்து வழக்கில் சொல்லியுள்ளேன். அந்த புகார் குறித்த ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. 02.06.2018 தேதியிட்ட எதிரிகள் அனுப்பிய அறிவிப்பில் நான் தான்

எதிரிகளுக்கு ரூ.55,465/- தர வேண்டும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் பொய்யாக வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டதாகும். மேற்படி அறிவிப்பிற்கு நான் ஏதேனும் பதில் அறிவிப்பு செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். அந்த அறிவிப்பை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த அறிவிப்பு அனுப்பபட்ட பின்னர் தான் வழக்கு காசோலையை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. 01.06.2018 அன்று தாக்கல் செய்துள்ளேன். இந்த அறிவிப்பு அனுப்பபட்ட பிறகு உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பிறகு காசோலை வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. காசோலை வழக்கு 25.06.2018-ல் தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த காசோலை சம்மந்தமாக 02.06.2018 ல் அறிவிப்பும் 25.06.2018ல் உரிமையியல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் இவ்வழக்கிலுள்ள காசோலை எ.ம.சா.ஆ1 எழுதப்பட்டுள்ள பெயர் மற்றும் தொகை இரண்டும் வெவ்வேறு மையினால் நிரப்பட்டிருக்கிறது என்றால் எனக்கு தெரியாது, எதிரி எழுதி கொண்டு வந்து கொடுத்தார், அதை எதிரியிடம் தான் கேட்க வேண்டும். 2017ல் பஞ்சாப் வங்கியினால் வழங்கப்பட்ட காசோலை என்றால் சரிதான். எதிரிகள் சொல்வது போல் இந்த காசோலைகள் அனைத்தும் பழைமையானது வழக்கிற்காக பூர்த்தி செய்து நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, அது எதிரிகளிடம் தான் கேட்க வேண்டும். எதிரிகளுடைய வங்கி கணக்கு இன்றைய தேதி வரை Block செய்யப்படாமல் செயல்பாட்டில் தான் உள்ளது என்றால் சரிதான், வங்கியில் தான் கேட்க வேண்டும். எதிரியின் வங்கி கணக்கு Block செய்யப்பட்டுள்ளதா என்ற விவரத்தை வங்கியில் தான் கேட்க வேண்டும். எதிரிகள் எதுவும் காசோலை கொடுக்கவில்லை என்று நான் உரிமையியல் வழக்கில் சொல்லியிருப்பதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. எதிரிகள் வெற்று காசோலை கொடுத்ததை நான் நிரப்பி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கு காசோலைக்கும் எதிரிகளுக்கும் சம்மந்தம் இல்லையென்றும், வெற்று காசோலையை பயன்படுத்தி எதிரிகள் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளதால் இவ்வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

12.41 PM